1973 பிப்ரவரி 7]

Travelling Allowance and Dail Allowance for Teachers

* 48. *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any Travelling Allowance and Daily Allowance are given to the teachers, when they are asked to go over to the Panchayat Union Offices on duty; and

(*b*) if not, the steps taken by the Government to sanction such allowances?

ஆசிரியர்களுக்கு பயணப்படி, நாட்படி

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு அலுவலாக அழைக்கப்படும்போது அவர்களுக்கு பயணப்படி, நாட்படி வழங்கப்படுகின்றனவா ?

(இ) அப்படி வழங்கப்படாவிடில், வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, ஆசிரியர்களுக்குப் பயணப்படி கொடுக்க வேண்டுமென்று பொதுவாக பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களின் விதிப்படி இருந்தாலும் கூட, ஆசிரியர் களுக்கு என்று தனியாக இல்லையென்று, சில ஊராட்சி ஒன்றியங் களிலே இது தரப்படாத நடைமுறை இருந்து வருகிறது. அதோடல்லாமல், ஆசிரியர்கள் அலுவல் காரியமாக அழைக்கப் பட்டாலும், தவறாமல் பயணப்படி கொடுக்க வேண்டுமென்று தனி உத்தரவு, ஆசிரியர்களுக்காக ஆர். டி. அண்டு எல். ஏ. டிபார்ட்மென்ட்டிலிருந்து வழங்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள், ஒன்றிய அலுவலகத்திற்கு அலுவல் காரணமாக வரும்போது பயணப்படி, நாள் படி

ஆகியவை முறைப்படி அளிக்கப்படுகிறது. இதர ஒன்றிய அலுவலர்களுக்கு இருக்கிற சலுகைகள் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. யாருக்காவது வழங்கப்படாத சூழ்நிலை ஏற்படுமேயானால், அவர்கள் விண்ணப்பம் கொடுப்பார்களேயானால், அது கவனிக்கப்பட்டு, வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யலாம்.

Underground Railway in Madras City

*49. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that there was a discussion during July 1972 between National Planning Commission and Officials of the Tamil Nadu Government on the construction of underground Railway in Madras City; and

(*b*) if so, the details thereof?

சென்னை மாநகருக்கு பாதாள ரயில்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் பாதாள ரயில் அமைப்பது குறித்து தேசிய திட்ட ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும், தமிழ்நாடு அரசு அதிகாரிகளுக்கும் இடையே 1972 ஜூலையில் விவாதம் நடைபெற்றது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திட்ட ஆணைக் குழுவைச் சேர்ந்த பெருநகரப் போக்குவரத்துக் குழு 27—7—1972-ல் மாநில ஆய்வுப் பிரிவைச் சந்தித்து விரிவான போக்குவரத்து ஆய்வுகளைச் செய்வதில் மாநில ஆய்வுப்பிரிவு எய்தியுள்ள முன்னேற்றத்தைச் சீர்தூக்கிப் பார்த்தது.